The management declared the lock-out on 25—1—1973 அந்தத் தேதியிலிருந்து லாக்-அவுட் நடந்து இருக்கிறது. மதிப்பிற்குரிய அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களிடத்தில் அந்தத் தொழிலாளர்கள் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் வந்த நேரத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இல்லை என்ற காரணத்தால் அந்த அமைச்சரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். சிம்சன் கன்சர்னில் உள்ள தகராறும் இன்னும் முடிவாக வில்லை. இது குறித்து ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அங்கே 180 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அடிக்கடி முதலமைச்சர் அவர்கள் மேனேஜ்மென்டிற்குச் சொல்கிறேன். என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இருப்பினும் இந்த சிம்சன், அடிசன் கம்பெனி பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இதனால் நாளைய தினம் ஒரு பெரிய பயங்கரமான நிலைமை, தொழிலாள தோழர்களின் ஒரு பெரிய ஊர்வலம் நடத்தும் நிலைமை ஏற்படலாம். ஆகவே, முன்கூட்டியே அமைச்சர் அவர்களும், அந்த இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து, அந்த லாக்-அவுட்டை விரைவிலேயே லிப்ட் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக, நாளையதினம் தொழிலாளர்கள் மனதில் ஏற்படும் வருத்தத்தையும் கவலையையும் நிச்சயமாக நாம் குறைக்கலாம். ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கவும், என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி விளககவும், இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, சென்னை அடிசன் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலையில் சுமார் 1,650 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையில் இரும்பு வார்ப்புகளும் பொறியியல் தொழிலுக்கு வேண்டிய வெட்டும் கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. இத்தொழிற்சாலையில் மூன்று அங்கிகாரம் பெற்ற தொழிற்சங்கங்கள் இருக்கின்றன.

1. தமிழ்நாடு நேஷனல் இன்ஜினீயரிங் எம்ப்ளாயீஸ் யூனியன், சென்னை-14.

2. சிம்சன் அண்ட் குருப் கம்பெனிஸ் ஒர்க்கர்ஸ், யூனியன் சென்னை-2.

3. சிம்சன் அண்ட் குரூப் கம்பெனிஸ் ஸ்டாப் யூனியன், சென்னை-2

தமிழ்நாடு நேஷனல் இன்ஜினீயரிங் எம்ப்ளாயீஸ் யூனியன் தொழில் துறையில் ஒழுங்கு முறை விதிகள் அடிப்படையின்படி 15-2-1972 முதல் நிர்வாகத்தினரால் அங்கீகாரம் பெற்றதிலிருந்து இன்னும் இரண்டாண்டு காலம் முடிவடைய வில்லை. சிம்சன் குரூப் கம்பெனி தொழிலாளர்கள் சங்கம் மற்றும் சிம்சன் குரூப் கம்பெனிஸ் ஸ்டாப் யூனியன் ஆகிய இரண்டு சங்கங்கள் அங்கீகாரம் கேட்டு கோரிக்கை எழுப்பியுள்ளது. மேலும் 1,000 தொழிலாளர்களிடமிருந்து அவர்கள் இச்சங்கங்களைச் சேர்ந்தவர்கள்

என்று கடிதங்கள் பெற்று அவற்றை அனுப்பியுள்ளனர் இக் கடிதங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் விவரங்கள் சரியானவையா என்று பரிசீலிக்கப்படுகிறது.

அடிசன் கம்பெனி லிமிடெட் நிர்வாகம் கீழ்க்கண்ட ஆறு தொழிலாளர்களைச் சட்ட விரோதமான வேலை நிறுத்தம் செய்யத் தூண்டுதல், நிர்வாகத்தினரைப் பயமுறுத்தல், நிறுவனத்தின் சொத்தை சேதப்படுத்துதல் ஆகிய குற்றங்களுக்காக வேலை நீக்கம் செய்தது.

1. திரு. மோகன்.
2. திரு. ஸ்ரீதரன்.
3. திரு. சங்கரலிங்கம்.
4. திரு. தசரதன்.
5. திரு. ஏகாம்பரம்.
6. திரு. சங்கரன்.

மேற்சொன்ன 6 தொழிலாளர்களுடைய வேலை நீக்கத்தை ஆட்சேபித்து சில அலுவலர்களைத் தாக்கிய குற்றத்திற்காகக் கீழ்க்கண்ட தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

1. திரு. முனுசாமி.
2. திரு. சுப்பிரமணியம்.
3. திரு. மணி.
4. திரு. கந்தசாமி.

வேலை நீக்கம் செய்யப்பட்ட பத்து தொழிலாளர்களில் திரு. கந்தசாமி என்பவர் கணக்குத் தீர்த்துக் கொண்டு சென்றுவிட்டார். மீதமுள்ள 9 தொழிலாளர்கள் சென்னை-2வது தொழிலாளர் துறை அலுவலரிடம் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 2 (ஏ) யின் கீழ் மனுச் செய்துள்ளனர். இத்தொழிற் தகராறுகள், விசாரணையில் இருந்து வருகின்றன.

இந்தக் கட்டத்தில் 18—1—1973 அன்று திரு. முத்துகிருஷ்ணன் என்னும் தொழிலாளியை பிரில் தயார் செய்யும் இயந்திரம் ஒன்றிலிருந்து அது போன்ற மற்றொரு இயந்திரத்தில் உற்பத்தியின் அவசியத்தை ஒட்டி வேலை செய்யக் கோரியதை அவர் மறுத்தார். அதன்பேரில் அவர் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டதை எதிர்த்து சிம்சன் அண்டு குரூப் கம்பெனிஸ் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்தனர். இதன் விளைவாக நிறுவனம் முழுவதும் இயங்காமல் நின்று விட்டது. 24—1—1973, 25—1—1973 தினங்களில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட தொழிலாளர்கள் நிறுவனத்தில் உள்ள தொலை பேசிகள், கண்ணாடி ஜன்னல்கள், முக்கியமான தஸ்தாவேஜுகள், சில இயந்திரங்களின் சில பாகங்கள் இவற்றைத் தாக்கி பலத்த சேதம் விளைவித்ததாக நிர்வாகத்தினர் கூறி, 25—1—1973 அன்று முதல் கதவடைப்புச் செய்தனர். 2—2—1973 அன்று சென்னை தொழிலாளர் துறை துணை ஆணையர் நிறுவனத்திற்குச் சென்று சேதத்தினால் ஏற்பட்ட நிலைமையைப் பார்வையிட்டு சேதம் நடந்தது பெரும்பாலும் உண்மையென்று அறிக்கை அனுப்பியுள்ளார்.